சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:—30.07.2021

## சாதாரணக்கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் ஆடி மாதம் 14—ஆம் நாள் (ஜீலை திங்கள் 30—ஆம் நாள்:—30.07.2021) வெள்ளிக் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் கடித எண்.11991/வரவு– செலவு (2) / 2021–3, நாள்.06.07.2021–ஆம் தேதிய உத்தரவு மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உத்திரவு மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் உத்தரவுப்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை 100 சதவீதம் முழுமையாக சின்னமனூர் நகராட்சி பகுதியில் செயல்படுத்தி மக்கும் குப்பைகள், மக்காத குப்பைகள் என தரம் பிரித்து மக்கும் குப்பைகளை MCC சென்டர் மூலம் உரமாக்கும் பணியும், மக்காத குப்பைகளை சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் பொது மக்களிடமிருந்து வரும் புகார்களை தவிர்த்தல், திடக்கழிவுகளை அப்புறப்படுத்துதல், கால்வாய்கள் சுத்தம் செய்தல், தூர்வாறுதல் போன்ற பணிகளை உடனுக்குடன் செய்து முடித்து, பொது மக்கள் நலன் மற்றும் சுகாதாரத்தை பாதுகாக்க வேண்டிய அவசர அவசிய சூழ்நிலை உள்ளது. எனவே, துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான அளவு தளவாட சாமான்கள் இருப்பில் இல்லாததாலும், எனவே கீழ்க்கண்ட விவரப்படியான தளவாட சாமான்களை அவசர அவசியம் கருதி வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.500000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்டுகிறது.

<u>தளவாட சாமான்கள் விவரம்</u>

1. கூட்டுமார்கள் – 100 எண்ணம்
2. சாக்கடை துலக்கும் கரண்டி – 100 எண்ணம்
3. குப்பை அள்ளும் தட்டு – 100 எண்ணம்
4. கையேடு – 100 எண்ணம்
5. மண் வெட்டி – 50 எண்ணம்
6. சீணா தட்டு – 50 எண்ணம்
7. கடப்பாறை கம்பி – 15 எண்ணம்
8. பிக்காட்சு – 15 எண்ணம்
9. ரோடு கூட்டும் பிரஸ் கட்டை – 60 எண்ணம்
10. வெட்டருவாள் – 15 எண்ணம்
11. இரும்பு சம்பட்டி – 5 எண்ணம்

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2016/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **326, நாள்.30.07.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகன எண்.TN60Z2921 என்ற டிராக்டர் வாகனத்திற்கு 2021–2022–ஆம் ஆண்டிற்கான புதுப்பித்தலின் போது மேற்கொண்ட செலவினம் FC Fees ரூ.650/–, Green Tax –ரூ.505/–, Sticker -ரூ.2500/ மற்றும் Emission Test – ரூ.200/– என மொத்தம் ரூ.3855/–ஐ தான் செலவு செய்ததாகவும் அதனை தனக்கு வழங்க கேட்டதை தொடர்ந்து மேற்கண்ட செலவினத்தை திரு.த.சரவணக்குமார், துப்புரவு பணியாளர் வழங்க ஒப்புதலுக்கு.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண், நாள்** **327 , நாள்.30.07.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்குவை பறப்பும் முதிர் கொசுக்கலை கட்டுப்படுத்த, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட பூச்சியியல் வல்லுநர் ஆகியோர்களின் அறிவுரைப்படி முதிர் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் புகையடிக்கும் இயந்திரம் (L.Fog) Fogging Machine-2 எண்ணம் புதியதாக வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோருவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2426/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **328, நாள்.30.07.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைக்காக கொசுக்களை (முதிர்) ஒழிக்க புகைமருந்து அடிக்கும் இயந்திரம் (Fogging Machine) கொண்டு அடிக்க தேவையான மருந்து பைரத்ரீம் போதிய அளவு இருப்பில் இல்லாததால் தற்போது 100 லிட்டர் தமிழ்நாடு அரசு மருத்துவ சேவை மையம் (TNMSC) அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று (TNMSC) அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று மருந்து வாங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2454/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **329, நாள்.30.07.2021**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மூலம் டெங்கு தடுப்பு நடவடிக்கையாக, வீடுகள், வணிக நிறுவனங்கள், பொது இடங்களில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் உள்ள கொசுப் புழுக்களை அழிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் அபேட் மருந்து (Temphoss 50% EC) 100 லிட்டர் தமிழ்நாடு அரசு மருத்துவ சேவை மையம் (TNMSC) அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் மூலம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.80000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி TNMSC அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று வாங்குவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2427/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **330, நாள்.30.07.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.2, கண்ணம்மாள் கார்டனிலிருந்து தேசிய நெடுஞ்சாலை தேனி—குமுளி சாலை பெட்ரோல் பங்க் வரை அமைக்கப்பட்டு வருகிறது. இதில் கண்ணம்மாள் கார்டன் மற்றும் பெட்ரோல் பங்க் அருகில் உள்ள சாலை சந்திப்புக்களில் (தேசிய நெடுஞ்சாலையில் கி.மீ.254+760 (Chinnamanur Starting Junction) மற்றும் கி.மீ 251+630 (Chinnamanur End Junction) தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் (NHAI) 2 எண்ணம் உயர்கோபுர மின் விளக்குகள் (High Mast Lights) அமைக்கப்படவுள்ளன. மேற்படி உயர்கோபுர விளக்குகள் அமைப்பதற்கு ஆகும் டேவணித் தொகை உள்ளிட்ட இதர செலவுகள் அனைத்தும் மேற்படி தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் (NHAI) மின் வாரியத்திற்கு செலுத்தப்படும் எனவும், அமைக்கப்படவுள்ள இரண்டு எண்ணம் உயர் கோபுர விளக்குகளுக்கு மாதாந்திர மின் கட்டணம் சம்மந்தப்பட்ட உள்ளாட்சித் துறையினரால் செலுத்தப்பட வேண்டும் என மேற்படி துறையின் 07.07.2021ம் நாளிட்ட NHAI/PIU/DGL/DTK/NH-45(E)& 220/2021/1107, எண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அமைக்கப்படவுள்ள இரண்டு எண்ணம் உயர்கோபுர மின் விளக்குகள் அமைப்பதற்கு மின்சார இணைப்பு பெற்றுத் தருவதற்கும், மேற்படி விளக்குகளுக்கு உபயோகப்படுத்தப்படவுள்ள மின்சாரத்திற்கு, மின் வாரியத்தினால் எழுப்பப்படும் மாதாந்திர மின் கட்டணத்தினை சின்னமனூர் நகராட்சியிலிருந்து செலுத்துவதற்கும் மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். (ந.க.எண்.2469/2021/இ1)**

**தீர்மான எண், நாள்** **331, நாள்.30.07.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

அரசாணை எண். 6 மற்றும் 19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.03.2007 மற்றும் 30.12.2009–இன்படி முறையே ரூ.10.16 கோடி மற்றும் (திருத்திய) ரூ.14.52 கோடி மதிப்பீட்டில் சின்னமனூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணியினை நடைமுறைப்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் இரண்டு சிப்பங்களாக முடிக்கப்பட்டு, மேற்பராமரிப்புப் பணிக்கு நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு, கழிவு நீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி திட்டத்தின் கீழ் இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் (Sewerage Treatment Plant) Online Monotoring System அமைத்து கண்காணிக்க மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தினால் (Pollution Control Board) சுத்திகரிப்பு நிலைய அனுமதியினை புதுப்பிக்க ஆய்வுகள் மேற்கொண்ட உதவிப் பொறியாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேற்படி Online Monitoring System அமைப்பதன் மூலம் கழிவு நீர் சுத்திகரிப்பு செய்யப்படுவதை கண்காணிக்க முடியும் என்பதால், மேற்படி அமைப்பினை பெங்களூர், Knowledge Lans Private Limited நிறுவனத்திடம் பெற்ற விலைப்புள்ளியின் அடிப்படையில் மேற்படி Online Monitoring System வழங்கியுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.22.00 இலட்சம் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், மேற்படி பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**<br>**2. மேற்படி பணிக்காகும் செலவினத்தை பாதாள சாக்கடைத் திட்ட நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **332, நாள்.30.07.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகன எண்.TN60V8239 என்ற டிப்பர் லாரிக்கு 2021–2022ம் ஆண்டிற்கான புதுப்பித்தல் (FC) மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட வாகனத்தில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.150000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரியதை மன்றம் ஏற்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **333, நாள்.30.07.2021** |
| **தீர்மானம்** | |

*******

## பொருள் எண்.9

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று தொடர்பாக பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக தினசங்கு நாளிதழில் வெளியிடவுள்ள கொரோனா விழிப்புணர்வு மலர் –2021–இல் சின்னமனூர் நகராட்சியின் சார்பாக விழிப்புணர்வு விளம்பரம் வழங்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலக ந.க.எண்.106/செ.ம.தொ.அ/2021, நாள்.09.07.2021ம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தியதை தொடர்ந்து மேற்படி விளம்பரம் வெளியிட்ட வகையில் ஆன செலவினம் ரூ.15500/–ஐ தினசங்கு நாளிதழ் கேட்டுக் கொண்டதை தொடர்ந்து செலவினத் தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.2615/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **334, நாள்.30.07.2021**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.10

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான புதை குழி வடிகால் திட்டத்தினை ஜீலை 2021 முதல் ஒப்பந்த அடிப்படையில் செயல்படுத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு 27.07.2021ம் தேதியன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 1.15% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.50% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு

**அலுவலகக் குறிப்பு:–**
1. **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.50%) திரு.திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.2075/2021/இ1).**

**தீர்மான எண், நாள்** **335 , நாள்.30.07.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, ராஜா ரைஸ்மில் 2வது தெரு கிழக்குப் பகுதியில் புதிய சிறு பாலம் கட்டும் பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு 27.07.2021–ஆம் தேதியன்று கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்புந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர் – 0.01% சதவீதம் மதிப்பீட்டைவிட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் – 0.22% சதவீதம் மதிப்பீட்டைவிட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–**

1. **குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.01%) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1893/2021/இ1).**

**தீர்மான எண், நாள்** **336, நாள்.30.07.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சியின் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் மினி பவர் பம்ப் மோட்டார்களின் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகளை சரி செய்யும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.281, நாள்.31.05.2021ம் தேதி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 02.07.2021ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**1. இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் முல்லை பெரியாற்றில் உள்ள முதல் கிணற்றில் 5HP மோட்டார்கள் 2 எண்ணம் மற்றும் சம்ப் மோட்டார்–1–இல் உள்ள 50HP மோட்டார் ஆகியவற்றில் உள்ள பழுதினை சரி செய்யும் பணி**

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.75750/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.76450/– |
| **2.இந்நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Open Well-5HP மோட்டார் மற்றும் 40HP பம்ப் வேலை மற்றும் ஸ்டார்ட்டர் வேலைகள்** | | |
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.32160/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.33140/– |
| **3.நகராட்சி எல்கைக்குட்பட்ட அம்மா உணவகம், கீழப்பூலானந்தபுரம், காந்தி நகர் காலனி 4வது தெரு ஆகிய இடங்களில் உள்ள போர்வெல் பழுதினை சரி செய்யும் பணி** | | |
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.2400/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.2500/– |

அலுவலகக் குறிப்பு:– 1.மேற்கண்ட பணிகள் செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல்காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்..

2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1303/2021/இ2)

தீர்மான எண், நாள் 337 , நாள்.30.07.2021

தீர்மானம்

*******

## பொருள் எண்.13

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகனமேடை வளாகத்தில் சடலங்களை எரியூட்டும் பொழுது கண்காணிக்கும் பணி மேற்கொள்ள CCTV Camera பொருத்தும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.0.72 இலட்சத்திற்கு 16.07.2021–ஆம் தேதியன்று கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Description of Items | Unit | Thiru.K.Vanaraj Rate | M/s PC Care, Chinnamanur | Ganapathy System Care, Chinnamanur |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 1 | Supply, Installation, Testing & Commissioning of 8 Channel DVR with UP to 8 cameras with SXGA (1280x1024) display, Each channel 25/30fps at CIF or 6/7 fps at D1 recording, 16 channel simulataneous playback, Easy backup:USB devices, network download. | 1 | 5000.00 | 5100.00 | 5150.00 |
| 2 | Supply, Installation, Testing & Commissioning f Weather Proof Camera (20m) with Day / Night with IR filter, 3.6mm (6mm, 8mm, 12mm) board lens, Q5x23PCS IR LED, Longest IR distance:20 meters, Water Proof and dustproof reaching IP 66 standard suitable for both indoor and outdoor use. | 1 | 3000.00 | 4100.00 | 4150.00 |
| 3 | Supply, Installation, Testing & Commissioning of 2 TB Hard Disk. | 1 | 9000.00 | 9050.00 | 9000.00 |
| 4 | 3+1 cable 58 Rs/m (700m laid) | 1 Coil | 1500.00 | 1600.00 | 1650.00 |
| 5 | Supply, Installation of 18.5 inches monitor | 1 | 6000.00 | 6100.00 | 6150.00 |
| 6 | Supply, Installation of BNC Bin Box | 1 | 1200.00 | 1250.00 | 1200.00 |
| 7 | HDMI Cable | 1 mtr | 50.00 | 50.00 | 55.00 |
| 8 | Supply and fixing of Installation charges | 1 | 6000.00 | 6500.00 | 6500.00 |

அலுவலகக் குறிப்பு:–

1. மேற்காணும் விவரப்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவரின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1927/2021/இ1).

தீர்மான எண், நாள் 338 , நாள்.30.07.2021

தீர்மானம்

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட தேனி குமுளி நெடுஞ்சாலையில் உள்ள பாதாள சாக்கடை திட்ட பிரதானக் குழாயினை சரி செய்யும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.59924/—ஐ விலைப்புள்ளிதாரர் திரு.கே.வனராஜ், சின்னமனூர் என்பவருக்கு குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் வழங்கவும், பாதாள சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி பொது மக்களின் நலனுக்காக 1920ம் வருடத்தின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** பதிவு செய்யலாம் (ந.க.எண்.1817/2021/இ1)
**தீர்மான எண், நாள்** 339 , நாள்.30.07.2021
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் வண்டி எண்.TN60S6634க்கு கீழ்க்காணும் விவரப்படி சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.38000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. ஆயில் பில்டர், டீசல் பில்டர், ஏர் பில்டர் புதியது மாற்றுதல்
2. நான்கு வீல் கீரிஸ் பேக்கிங்
3. நான்கு வீல் பிரேக் லைனிங் மாற்றுதல்
4. நான்கு வீல் பேரிங் மாற்றுதல்
5. பிரண்டு சஸ்பென்சர் அனைத்தும் மற்றும் புஸ் மாற்றுதல்
6. புதிய ஹாரன் மாற்றுதல்
7. கூலண்ட் ஆயில் மாற்றுதல்
8. ஹேண்ட் பிரேக் கேபிள் புதியது மாற்றுதல்
9. வீல் அலெய்மெண்ட், வீல் பேலன்ஸ் பார்த்தல்
10. வாகனத்தில் உள்புறம் அனைத்தும் பாலீஸ் செய்தல்
11. பிரேக் சிலிண்டர் செக்கப் செய்து புதியது மாற்றுதல்
12. வாட்டர் வாஸ் செய்தல், 13 எண்ட் பால் ஜாயிண்ட் பார்த்தல்

**அலுவலகக் குறிப்பு:—** 1.மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். (ந.க.எண்.7057/2014/இ2)
**தீர்மான எண், நாள்** 340, நாள்.30.07.2021
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.16**

சின்னமனூர் நகராட்சிக்கு அரசாணை (டி) எண்.40, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-2), நாள்.05.02.2021–இல் 2020–2021 ஆம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு பணிகளான 1 குடிநீர் விநியோகப் பணிகள் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டிலும், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்டும் 1 பணி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும், தெருவிளக்கு 1 பணி ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 1 எண்ணம் 10 கேவிஏ மின் ஆக்கி வாங்கும் பணி ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 4 பணிகள் ரூ.313.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டன. மேற்படி பணிகள் மேற்கொள்ள 03.03.2021ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் மற்றும் கொரோனா ஊரடங்கின் காரணமாக 29.06.2021ம் அன்று திறக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>நவீன எரிவாயு தகனமேடையில் 10 கேவிஏ ஜென்செட் அமைக்கும் பணி – ரூ.3.50 இலட்சம்</u>**

1. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 4.99% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்

2. திரு.த.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி – 8.68% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்

3. M/s Max Power Services, Chennai – 44.09% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்

4. M/s Madras Power Corporation , Chennai – 44.15% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்

5. M/s Chennai Diesel Private Limited, Chennai – 43.30% மதிப்பீட்டு விலையைவிடகூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதில், பரமத்தேவன்பட்டி திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் 4.99% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரரிடம் பேரப்பேச்சு அடிப்படையில் கடிதம் வழங்கக்கோரி, (Negotiation Letter) 01.07.2021–இல் கோரியதில், ஒப்பந்தக்காரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவர் கட்டிடப் பணிகளுக்கான மூலதன உபகரணங்கள் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்கள் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீடு விலையை விட 4.99% கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை குறைக்க இயலாது எனத் தெரிவித்துள்ளதால், 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2–இல் முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம் அல்லது விதியின்படி 5%-க்கு குறைவாக உள்ளதால் ஒப்புதல் செய்யலாம். (ந.க.எண்.2380/2018/இ1).**

**தீர்மான எண், நாள்** **341, நாள்.30.07.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.17**

சின்னமனூர் நகராட்சிக்கு அரசாணை (டி) எண்.40, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-2), நாள்.05.02.2021–இல் 2020–2021 ஆம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு பணிகளான 1 குடிநீர் விநியோகப் பணிகள் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டிலும், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்டும் 1 பணி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும், தெருவிளக்கு 1 பணி ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 1 எண்ணம் 10 கேவிஏ மின் ஆக்கி வாங்கும் பணி ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 4 பணிகள் ரூ.313.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டன. மேற்படி பணிகள் மேற்கொள்ள 03.03.2021ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் மற்றும் கொரோனா ஊரடங்கின் காரணமாக 29.06.2021ம் அன்று திறக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>இந்நகராட்சிக்குட்பட்ட காந்தி நகர் காலனி, சாமிகுளம் மெயின் ரோடு, விநாயகர் கோவில் தெரு, சிவசக்தி நகர் மற்றும் இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி – ரூ.50.00 இலட்சம்</u>**

1. திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர், சின்னமனூர் – 4.99% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்

2. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி– 5.25% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதில், சின்னமனூர் திரு.கே.வனராஜ் என்பவரின் 4.99% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரரிடம் பேரப்பேச்சு அடிப்படையில் கடிதம் வழங்கக்கோரி, (Negotiation Letter) 05.07.2021–இல் கோரியதில், ஒப்பந்தக்காரர் திரு.கே.வனராஜ் என்பவர் கட்டிடப் பணிகளுக்கான மூலதன உபகரணங்கள் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்கள் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீடு விலையை விட 4.99% கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை குறைக்க இயலாது எனத் தெரிவித்துள்ளதால், 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2–இல் முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம் அல்லது விதியின்படி 5%-க்கு குறைவாக உள்ளதால் ஒப்புதல் செய்யலாம். (ந.க.எண்.2380/2018/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **342, நாள்.30.07.2021** |
| **தீர்மானம்** | |

*******

பொருள் எண்.18

சின்னமனூர் நகராட்சிக்கு அரசாணை (டி) எண்.40, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-2), நாள்.05.02.2021–இல் 2020–2021 ஆம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு பணிகளான 1 குடிநீர் விநியோகப் பணிகள் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டிலும், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்டும் 1 பணி ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும், தெருவிளக்கு 1 பணி ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 1 எண்ணம் 10 கேவிஏ மின் ஆக்கி வாங்கும் பணி ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 4 பணிகள் ரூ.313.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டன. மேற்படி பணிகள் மேற்கொள்ள 03.03.2021ம் நாள் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தேர்தல் நன்னடத்தை விதிகள் மற்றும் கொரோனா ஊரடங்கின் காரணமாக 29.06.2021ம் அன்று திறக்கப்பட்டு மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>இந்நகராட்சிக்குட்பட்ட விரிவாக்கப் பகுதிகளில் தெருவிளக்குகள் (LED) அமைக்கும் பணி – ரூ.60.00 இலட்சம்</u>**

1. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி– 4.98% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்
2. திரு.த.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி – 6.55% மதிப்பீட்டு விலையைவிட கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக வரப்பெற்றுள்ளதில், பரமத்தேவன்பட்டி திரு.ஆர்.பரமானந்தன் என்பவரின் 4.98% சதவிகிதம் மதிப்பீடு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரரிடம் பேரப்பேச்சு அடிப்படையில் கடிதம் வழங்கக்கோரி, (Negotiation Letter) 05.07.2021–இல் கோரியதில், ஒப்பந்தக்காரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவர் மூலதன உபகரணங்கள் விலை உயர்வு மற்றும் தொழிலாளர்கள் கூலி உயர்வு காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீடு விலையை விட 4.98% கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை குறைக்க இயலாது எனத் தெரிவித்துள்ளதால், 2000ம் ஆண்டிற்கான உள்ளாட்சி அமைப்பிற்கான நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் இயல்–II (Chapter-II) விதி எண்.2.7.2–இல் முதல் அழைப்பிலேயே மதிப்பீடு விலை விகிதத்திற்கு 5 சதவிகிதத்திற்குள் கூடுதல் தொகையினை ஒப்புதல் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம் அல்லது விதியின்படி 5%-க்கு குறைவாக உள்ளதால் ஒப்புதல் செய்யலாம். (ந.க.எண்.2380/2018/இ1).

தீர்மான எண், நாள் 343, நாள்.30.07.2021

தீர்மானம்

*******